கிழக்கு மாகாணத்தில் சுனாமியின் பின்னரான பங்குபற்றுதல் ரீதியிலான கரையோர வலய மீளக்கட்டியெழுப்புதல் மற்றும் நிலைத்து நிற்கவல்ல முகாமைத்துவத்திற்கான இலங்கை செயற்திட்டத்தின் 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு மற்றும் கமத்தொழில் அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் என்பவற்றுக்கிடையேயான 2009 ஜூலை 23 ஆந் திகதிய ஜீஈஎவ்-எவ்எஸ்பீ-5-எல்கே இலக்க மானிய உடன்படிக்கையின் V ஆம் உறுப்புரையில் உள்ள 5.02 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்ட அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலம் என்பன

மானிய உடன்படிக்கையின் பிரகாரம், கடற்றொழில் மற்றும் முன்னைய கடல்வாழ் உயிரின மூலவள அமைச்சு நிறைவேற்று முகவர் ஆவதுடன் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவரும் ஆகும். எவ்வாறாயினும், 2012 ஏப்ரல் 04 ஆந் திகதியன்று மானிய உடன்படிக்கையில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்திற்கமைய, பாதுகாப்பு மற்றும் நகர்புற அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் புதிய நிறைவேற்று முகவர் ஆகியது, தற்சமயம், இத்துறையினது நடவடிக்கைகள் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சிற்கு மாற்றஞ் செய்யப்பட்டுள்ளன. சுனாமியால் பாதிக்கப்பட்ட உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்த மீளக் கட்டியெழுப்புதல் மற்றும் முகாமைத்துவப் பாதுகாப்பை நெறிப்படுத்தி அவற்றைப் புனர்நிர்மாண செய்முறைக்குட்படுத்துவதன் மூலம் இலங்கையின் கிழக்குக் கரையோரத்தில் நிலைத்து நிற்கக் கூடிய வாழ்வாதாரத்தை ஆதரிப்பதும் காலநிலை மாற்றப் பாதிப்புகளைக் குறைப்பதும் செயற்திட்டத்தின் நோக்கமாகும். மானிய உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் 14.84 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இது உலகளாவிய சுற்றாடல் வசதிகளுக்கான நிதியளிப்பு 7.27 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மற்றும் இணை நிதியளிப்பான 7.57 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்பவற்றைக் கொண்டிருந்தது. இவற்றுடன் இலங்கை அரசாங்கத்தின் 430,300 அமெரிக்க டொலர்கள், கமத்தொழில் அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தின் 7,083,650 அமெரிக்க டொலர்கள் மற்றும் உலக பாதுகாப்பு மன்றத்தின் 55,500 அமெரிக்க டொலர்களும் உதவு தொகைகளாக அமைந்தன. 2010 செப்தெம்பர் 10 ஆந் திகதி ஆரம்பமாகிய செயற்திட்டம் 2015 செப்டம்பர் 10 ஆந் திகதி முடிவடையவிருந்தது. பின்னர், செயற்திட்டக் காலப்பகுதி 2016 செப்தெம்பர் 10 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப நான் கணக்காய்வை மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிசார் கூற்றுக்களில் காணப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட உயரளவு நிதிசார் அறிக்கைகள் மற்றும் செயன் முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டுள்ளனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க மேற்கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

----------------------------

### 2.1 அபிப்பிராயம்

--------------------

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2014 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைய 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதி அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப மீளளிப்பிற்கான விண்ணப்பங்களை ஆதரிப்பதற்கு நியாயபூர்வமாக நம்பிக்கை அளிக்கக்கூடியனவாக இருந்தன என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகிறேன்.

## 2.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைபெறும் வேலைகளது பெறுமதியாகிய ரூபா 18,217,174 முடிவடைந்த வேலைகளாக நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் பௌதீகச் செயலாற்றல்

### 3.1 நிதிப் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டின் போதும் 2014 திசெம்பர் 31 வரையிலுமான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில குறிப்பிடத்தக்க புள்ளி விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| தோற்றுவாய் | கடன் உடன்படிக்கைகளில் நிதியளிப்பிற்கு உடன்பாடாகிய தொகை | | பயன்படுத்தப்பட்ட நிதி | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | மீளாய்வாண்டின் போது | | 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐஎவ்ஏடீ | 14.41 | 1,929.10 | 1.33 | 174.19 | 2.61 | 374.06 |
| இலங்கை அரசாங்கம் | 0.43 | 55.90 | 0.04 | 5.62 | 0.11 | 14.70 |
| மொத்தம் | 14.84 | 1,985.00 | 1.37 | 179.81 | 2.72 | 388.76 |

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்ட வேலைத்திட்டத்திற்கமைய, 2010 முதல் 2014 வரையான காலப்பகுதியின் போது மேற்கொள்வதற்கு எதிர்பார்த்த செயற்திட்ட நடவடிக்கைகளுக்கு ரூபா 920.97 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2014 ஆம் ஆண்டு இறுதிவரை 42 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 388.76 மில்லியன் மாத்திரமே மொத்தமாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் 03 உப நடவடிக்கைகளின் கீழ் 12 நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 32.55 மில்லியன் ஆகும். இதில் எதுவுமே முற்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், செயற்திட்டத்தின் முக்கிய உறுப்பு சூழலுக்கான முறைமையை மீள அமைப்பதே. இவ்வுறுப்பிற்கு 4.10 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு நிகரான ரூபா 528.66 மில்லியன் ஒதுக்கப்பட்டு அதில் ரூபா 151 மில்லியன் மாத்திரமே 2014 திசெம்பர் 31 வரை செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வாகன மற்றும் உபகரணக் கொள்வனவுக் கிரயம் மொத்த ஒதுக்கீட்டை விட 21 சதவீத அதிகரிப்புக்குள்ளாகியிருந்தது.

(இ) ஒட்டுமொத்தமாகப் பார்க்குமிடத்து, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 6 ஆண்டு முடிவிலும் செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக கமத்தொழில் அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் ஒதுக்கீடு செய்த 14.41 மில்லியன் அமெரிக்க டொலரில் 2.61 மில்லியன் அமெரிக்க டொலர் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

**3.2 பௌதீக முன்னேற்றம்**

அதிகூடிய காலநிலை மாற்றங்களால் சூழலுக்கான முறைமையும் சமுதாயமும் பாதிப்பிற்குள்ளாவதைக் குறைப்பதற்காக தொழில்நுட்ப உதவி, சூழலுக்கான முறைமையை மீள அமைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் ஆகிய பிரதான உறுப்புகளின் கீழ் செயற்திட்டத்தின் கீழ் மானியம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்கொள்ளப்படவிருந்த 71 உப நடவடிக்கைகளில் 61 உப நடவடிக்கைகள் மாத்திரமே 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அமுல்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் சிலவற்றின் மீதான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

(அ) 2014 ஆம் ஆண்டிற்கான வேலைத்திட்டத்தின் பிரகாரம், சூழலுக்கான முறைமையை மீள அமைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 150 காட்சிப் பதாதைகளை அமைப்பதற்கென ரூபா 6.00 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் 35 காட்சிப் பதாதைகளை மாத்திரம் அமைப்பதற்கு மீளாய்வாண்டின்போது மொத்தமாக ரூபா 1.40 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) சூழலுக்கான முறைமையை மீளவமைக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சூழலுக்கான முறைமையை நடைமுறைப்படுத்தல் மற்றும் மீளவமைப்பதற்கான கூறுக்கு வசதிகளை வழங்குவதற்கும் வழிகாட்டலை அபிவிருத்தி செய்வதற்குமென வருடாந்த வேலைத்திட்டத்தில் ரூபா 11.50 மில்லியன் கூட்டுத்தொகையானது ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தபோதும், மீளாய்வாண்டு முடிவிலும் அவ்வாறான வேலைகள் ஆரம்பிக்கப்படாதிருந்தன. எவ்வாறாயினும், மேற்படி நடவடிக்கைகள் முடிவடைந்த வேலைகளாக மீளாய்வாண்டிற்கான முன்னேற்ற அறிக்கையில் காட்டப்பட்டிருந்தன.

(இ) நிலாவெளியில் ரூபா 22.04 மில்லியன் கிரயத்தில் கழிவு முகாமைத்துவ வசதியை அபிவிருத்தி செய்வதற்கு மீளாய்வாண்டின்போது குச்சவெளி பிரதேச சபையுடன் செயற்திட்டம் உடன்படிக்கை ஒன்றில் ஈடுபட்டிருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், 2015 ஏப்ரல் 14 ஆந் திகதிக்கு முன்னர் சகல வேலைகளும் முடிவடைந்திருக்க வேண்டும். எவ்வாறாயினும், காவல் அறை, கொம்பொஸ்ட் களஞ்சியம், இளைப்பாறும் அறை, கழிவறை போன்றவற்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 11.90 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் 2015 ஜூன் 30 ஆந் திகதியளவிலும் அவை ஆரம்பமாகாதிருந்தன.

(ii) வளாகத்தைச் சுற்றிவர GI குழாய்களை வயர்மெஸ் மூலம் சங்கிலிபோல் பிணைப்பதற்கான ஒப்பந்தத்தில், வெல்டிங் மூலம் இணைக்கப்பட்டுள்ள பகுதிகளை துருப்பிடிப்பதைத் தாங்கி நிற்கவல்ல மைபூசுவதன் மூலமும் இனாமல் மை பூசுவதன் மூலமும் இரு முறை செய்வதற்கு மொத்தமாக ரூபா 561,600 வழங்க ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டபோதும், இரு தடவைகள் மை பூசப்படாத நிலையில் மொத்தத் தொகையும் விடுவிக்கப்பட்டிருந்தது.